நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2. சிவகாசி.

**முன்னிலை : திரு.A.விஜயபாரதி,** B.A.B.L

நீதித்துறை நடுவர் எண்.II. சிவகாசி

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் நாள் சனிக்கிழமை

**சி.ஆர்.எம்.பி.எண்.137/2025**

மாடசாமி (வயது 43/2025),
த/பெ.கருப்பசாமி,
5/3257–10, முனீஸ்வரன் காலனி,
நாரணாபுரம்,
சிவகாசி. ... மனுதாரர்/ புகார்தாரர்

– எதிர் –

1.முத்துக்கிருஷ்ணன் (54/2025),
த/பெ.சுழியநாயகம்,
5/3052/9, விஜயலட்சுமி காலனி,
சிவகாசி.

2.மஞ்சுளா (வயது 48/2025),
க/பெ.முத்துக்கிருஷ்ணன்,
5/3052/9, விஜயலட்சுமி காலனி,
சிவகாசி.

3.மகேந்திரன் (வயது 22/2025),
த/பெ.முத்துக்கிருஷ்ணன்,
5/3052/9, விஜயலட்சுமி காலனி,
சிவகாசி. ... எதிர்மனுதாரர்கள்/எதிரிகள்

இன்று (01.08.2026) ஆம் தேதி இம்மனு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.அய்யூப்அலிசேட் பி.ஏ.பி.எல்., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரையினை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர், சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் அளித்த புகார் மனுவின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு வழக்கு பதிவு செய்திட உதவி ஆய்வாளருக்கு உத்தரவிட வேண்டுமென கோரி பி.என்.எஸ்.எஸ். பிரிவு 175(3) இன் கீழ் இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

VIJAYA BHARATHI Digitally signed by VIJAYA BHARATHI

**<u>2.மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

புகார்தாரர் மாடசாமி இந்த மனுவின் மனுதாரர் ஆவார். மனுதாரர் சிவகாசி, முனீஸ்வரன் காலனியில் Blessing Fine Arts என்ற பெயரில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிண்டிங் தொழில் செய்து வருகிறார். எதிரிகள் மூவரும் மனுதாரரின் மேற்படி கம்பெனியில் மார்ச் 2024 வரை வேலை செய்து வந்தார்கள். மேற்படி எதிரிகள் மூவரும் மே 2024 முதல்வாரத்தில் மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிய விருப்பமில்லை என்று தெரிவித்த காரணத்தினால் அவர்களுக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகை கணக்கிடப்பட்டு அவர்களும் ஒப்புக்கொண்டு மனுதாரரிடமிருந்து நிலுவைத் தொகையை பெற்றுச் சென்று தற்போது எதிரிகள் மூவரும் மனுதாரரின் கம்பெனியிலிருந்து வெளியேறி வேறு கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார்கள். பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் 1வதுஎதிரி மனுதாரரிடம் போனில் தொடர்பு கொண்டு எதிரிகள் மூவருக்கும் தீபாவளி போனஸ் தர வேண்டும் என்று கூறி வந்தார். அதற்கு மனுதாரர் ஏற்கனவே கணக்கு பார்த்து அனைத்து தொகையையும் எதிரிகளிடம் கொடுத்துவிட்டதால் பணம் எதுவும் தர முடியாது என்று கூறி வந்துள்ளார். இதனால் மனுதாரருக்கும், 1வதுஎதிரிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது.

2.1. இந்நிலையில் கடந்த 03.11.2024 ஆம் தேதி மாலை 6 மணிக்கு மனுதாரரின் வீட்டிற்கு வந்த எதிரிகள் மூவரும் மனுதாரரை பார்த்து தேவிடியா மகனே என்று தகாத வார்த்தையால் பேசி, எங்கும் போகவிடாமல் தடுத்து கம்பால் அடிக்க வந்தபோது மனுதாரர் கையால் தடுத்துள்ளார். பின்னர் அருகிலிருந்த நபர்கள் எதிரிகளை சத்தம் போடவும் எதிரிகள் மூவரும் சேர்ந்து மனுதாரரை பார்த்து நாங்கள் கேட்ட பணத்தை கொடுக்காமல் இருந்தால் உன் சாவு எங்கள் கையில் தான் என்று கொலைமிரட்டல் விடுத்து சென்றுள்ளனர். இதனால் மனுதாரர் சிவகாசி கிழக்கு காவல்நிலையத்தில் 3.11.2024 ஆம் தேதி புகார் கொடுத்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் விருதுநகர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு கடந்த 22.11.2024 ஆம் தேதியன்று புகார் மனு அனுப்பியுள்ளார். அதனை 23.11.2024 ஆம் பெற்றுக்கொண்ட விருதுநகர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் நாளது தேதி வரை எதிரிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே எதிரிகள் மீது

வழக்குபதிவு செய்திட உத்தரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரரின் மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. சிவகாசி, கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் மனுதாரரின் மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு மனுதாரரின் மனுவில் முதல்நிலை நோக்கு வழக்கு (Prima facie Case) வெளிப்பட்டால் மட்டுமே அதன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள வேண்டுமென இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, மனுதாரர் எதிரிகளுக்கு எதிராக அளித்த மனுவின் மீது சிவகாசி, கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு, அதில் முதல் நிலை நோக்கு வழக்கு (Prima facie Case) வெளிப்பட்டால் மட்டுமே அதன் மீது முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VIJAYA BHARATHI

Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2
சிவகாசி.